**மாங்காடு நகராட்சி**

**நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

2025ம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள் நடவடிக்கை விவரம்.

................................................................................

குறள்- எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

விளக்கம்- செருக்கு இல்லாமல் அடக்கமாக வாழ்வது எல்லார்க்குமே நல்லதுதான்;
அவ் எல்லாருள்ளும் செல்வர்களுக்கு அது மேலும் ஒரு செல்வமாக
விளங்கும்.

___***-----

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் **ஜூன் 2025** மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான **ஜூன் 2025** மாதத்திற்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s. Blooming Recycles நிறுவனம்மூலம் 52 DBC பணியாளர்கள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது., மேற்படிபணி 01.02.2025 முதல் 31.03.2025 உடன் வழங்கப்பட்ட பணி உத்தரவு முடிவடையும் பட்சத்தில், பொதுமக்களின் சுகாதாரநலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதேவிலை விகிதத்தில் 01.07.2025முதல் 30.09.2025 வரை மூன்று மாத காலத்ததிற்கு பணி நீட்டிப்பு வழங்கி பணி உத்தரவு வழங்கவும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.20,00,000/-பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம் .

**<u>பொருள் எண்.5</u>**

மாங்காடு நகராட்சியில் **2023–24** ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையினரால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி, தணிக்கை சமர்ப்பிக்க வேண்டிய, வருவாய் மூலதன நிதி ஆண்டு கணக்குகள் மற்றும் இதர நிதி கணக்குகளை M/S RMS Account Consultant நிறுவனத்தின் மூலம் தயார் செய்யவும் மற்றும் தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்புககள நகல்கள் எடுக்கவும் தோராய செலவினம் ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ளது.

1) Cursor Solution - 2,05,500/-
2) RMS Account Consultant – **2,00,000/–**
3) J.B. Soft Systems - **2,06,500/–**

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய RMS Account Consultant நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**<u>பொருள் எண்.6</u>**

மாங்காடு நகராட்சியில், 2015-2016ஆம் ஆண்டு முதல் 2023-2024 ஆம் ஆண்டு வரை , பணிபுரிந்த பணியாளர்களுக்கு. சேமநலநிதி கணக்கிற்கான வட்டி பிரேரரனை தயார் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் அனுமதி பெற்று, சம்மமந்தப்பட்ட பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால், தணிக்கை ஆட்சேபனை உருவாக்கப்பட்டு தணிக்கை நிவர்த்தி செய்ய இயலாமல் நிலுவையில் உள்ளது. எனவே நகராட்சியில் பணிபுரிந்த பணியாளர்களின் நலன் கருதி, சேமநலநிதி கணக்கிற்கான வட்டி பிரேரணை தனியர் கருத்துரு நிறுவனம் மூலம் தயார் செய்யவும், அதற்கான கட்டணம் தோராய செலவினம் ரூ. 2.00/- இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மேலும், பணியின் அவசர அவசியம் கருதி, விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில்,

1) Rajrev soft system -1.99.470/-
2) Entech Solution - 2.10,215/-
3) Venkat Events -2,20,960/-

குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Rajrev soft system நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.7**

சென்னை உயர்நீதி மன்றம் பெஞ்ச் கிளை W.P(MD)29217&30354/2024,நாள்.27.01.2025 வழங்கிய உத்தரவின் படி இந்நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் அமைந்துள்ள பல்வேறு அரசியில் கட்சிகளின், (வணிக சங்கம் மற்றும் சமுதாய சார்ந்த) கொடி கம்பங்கள்,பீடத்துடன் கூடிய கொடி கம்பங்கள் (17.05.2025 19.05.2025 மற்றும் 23.05.2025) ஆகிய தேதிகளில் கிரேன் மூலம் அகற்றப்பட்டது. மேற்படி அரசியில் கட்சிகளின், (வணிக சங்கம் மற்றும் சமுதாய சார்ந்த) கொடி கம்பங்கள்,பீடத்துடன் கூடிய கொடி கம்பங்கள் கிரேன் மூலம் அகற்றியதற்கான செலவினம் ரூ.89,000/– (என்பத்தொன்பதாயிரம் மட்டும்) பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8**

மாங்காடு நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வரும் சூழலில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998-ன்படி சொத்துவரி விதிப்பு செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது கடித ந.க.எண்.32658/ஆர்-1/2023ந் தேதிய கடிதத்தில் தமிழ்நாடு ஆரம்ப கல்விச் சட்டம் பிரிவு 34-இல் அரசின் முன் அனுமதியுடன் நகர்மன்றங்கள் சொத்துவரியுடன் கல்விவரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை பிரிவு 35(1)இல் சொத்துகளின் ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கு மிகாமல் விதிப்பு செய்ய நகராட்சிகள் சட்டம் பிரிவு 80இல் நகரமன்றங்கள் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதை பின்பற்றி பிரிவு 91இல் சொத்துவரி ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கு மிகாமல் சொத்துவரியுடன் கூடுதலாக விதிப்பு செய்ய மன்ற தீர்மானம் செய்த பின்பு உரிய நடைமுறைகளை பின்பற்றி விளம்பரம் செய்து அதன் மீதான ஆலோசனைகள்/ முறையீடுகள் குறிப்பிட்ட நாட்களுக்குள் பெற்று அதனை மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைத்து இறுதி முடிவின்மீது அரசாணை பெற்று நடைமுறைபடுத்தவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதை பின்பற்றி மாங்காடு நகராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்தில் ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வரும் சொத்துவரி ஆண்டு மதிப்பில் 5 விழுக்காடு (5%) மிகாமல் உரிய நடைமுறைகளை பின்பற்றி கல்வி வரிவிதிக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

நகரின் வளர்ச்சியுடன் கல்வியை மேம்படுத்துவதை கருத்தில் கொண்டு ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வரும் சொத்துவரி ஆண்டு மதிப்பில் (5%) மிகாமல் கல்வி வரி நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.9**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ன்படி இந்நகராட்சியில் உள்ள அனைத்து வரி விதிப்புதாரர்களுக்கும் சொத்துவரி,குடிநீர் கட்டணம் , பாதாள சாக்கடை இணைப்பு கட்டணம் மற்றும் தொழில்வரி கேட்பு பதிவு புத்தகம் அரசு பதிவு பெற்ற கூட்டுறவு சங்கத்திடம் அச்சடித்து பெறவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.10**

2025-2026 ம் ஆண்டிற்கு இந்நகராட்சியில் உள்ள பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவில்,பயன்படுத்தப்படும் Printer களுக்கு தேவையான Toner கள் வாங்கி வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.10.00/- இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், அரசு பதவி பெற்ற கூட்டுறவு சங்கத்தில் வாங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு (TURIP) **2025–2026** ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த **28.04.2025** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Providing BT Surface to Ramajayam 1st Cross Street 180/001/R035, Ambal Gajalakshmi Nagar 1st Street 180/001/R030,Ambal Gajalakshmi Nagar 2nd Street 180/001/R031, Sri Ambal Nagar Extn 180/001/R022,ASR City 5th Street 180/001/R015,Ashok Avenue Main Road 180/002/R075,Thiruvalluvar City 2nd Street 180/002/R065,Thiruvalluvar City 4th Street 180/002/R067,Padmavathi Nagar 1st street 180/003/R311,Manali Saravana Nagar 1st street 180/003/R233,East Kamatchi Nagar 1st stree cross street 180/003/R426 in Mangad Municipality.(Package-1) | **61.00** | திரு.எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட **0.09% குறைவு** |
| | | | திருவாளர்.தில்லைநடராஜா ரோடுகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட **0.42% அதிகம்** |
| 2 | Providing BT Surface to Srinivasa Nagar 5h Street 180/018/R829,Srinivasa Nagar 6th Street 180/018/R831,Srinivasa Nagar 4th Street 180/018/R850,Srinivasa Nagar 3rd Street 180/018/R852,Srinivasa Nagar 2nd Street 180/018/R851,Srinivasa Nagar Ext 6th Street 180/018/R855,Subam Nagar 1st Street 180/021/R942,Kamaraja Street Mangalpuram | **82.00** | திருவாளர்.தில்லைநடராஜா ரோடுகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட **0.09% குறைவு** |

| | | | | |
|---|---|---|---|---|
| | 180/021/R942,Mangalapuram Meenakshi Nagar 180/022/R995,Mahalakshmi Nagar 180/022/R101,Meenakshi Nagar 3rd Cross Street 180/022/R968,Balaji Nagar 2nd Street 180/022/R975,Sri Meenatchi Nagar Mangalapuram 180/022/R966,Mangalapuram Meenakshi Nagar 180/022/R967,Charles Nagar 2nd Street 180/022/R988,Sabari Nagar 3rd Street-1 180/022/R960,Sabari Nagar 4th Street 180/022/R959 in Mangadu Municipality.(Package-II) | | திரு.எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட **0.32% அதிகம்** |
| **3** | Providing BT Surface to Subam Nagar180/022/R981,New Kamatchi Nagar 3rd Street180/023/R34, New Kamatchi Nagar 1st Cross Street180/023/R126, New Kamatchi Nagar 2nd Cross Street180/023/R1038,Subam Nagar 4th Street180/023/R1027, Subam Nagar 6th Street180/023/R1030, Subam Nagar 3rd Street180/023/R1026, Subam Nagar 5th Street180/023/R1028, Subam Nagar 2nd Street180/023/1025, Govindaraj Nagar 1st Street180/026/R1148, Govindaraj Nagar 2nd Street180/026/R1151 ,Charles Nagar 2nd Street180/026/R1157, North Street Pattur180/026/R1194, RSR Garden Pattur (s.s.sr)Avenue 1st Cross Street180/027/R1236 in mangadu municipality.(Pacakge-III) | **76.00** | திருவாளர்.தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட **0.09% குறைவு** |
| | | | திரு.எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட **0.31% அதிகம்** |
| **4** | Providing BT Surface to Kundrathur Main Road Balaji Nagar180/022/R978,Perumal Kovil Street 180/022/R996, SMA House Main Road180/022/R983,Sabari Nagar East Side 180/022/R956, sabari Nagar West Side 180/022/R977, Sabari Nagar 3rd Street 108/022/R958 in Mangadu Municipality.(Package-IV) | **88.50** | திரு.எம்.கார்த்திக் | மதிப்பீடு தொகையை விட **0.09% குறைவு** |
| | | | திருவாளர்.தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட **0.68% அதிகம்** |
| **5** | Providing BT Surface to Vaikunda Perumal 4th Street 180/011/R553 ,Om Sakthi Nagar 4th Main Road 180/011/R541 ,Om Sakthi Nagar Annex 5th Street 180/011/R540 ,Sundaresan Nagar 2nd Street 180/011/R548 ,Om Sakthi Nagar 1st Street 180/011/R557 Sundaresan Nagar 1st Street 180/011/R548 ,Vaikunda Perumal Kovil Main Road 180/011/R551 ,Vaikunda Perumal 1st Street 180/011/R555 ,Mangadu Main Road 180/011/R550 ,Om Sakthi Nagar 2nd Street 180/011/R556, Srinivasa Nagar 2nd street 180/014/R665,Srinivasa Nagar 4th street 180/014/R654, Indra Nagar Kaveri street 180/015/R696 in Mangadu Municipality.(Package-V) | **73.50** | திருவாளர்.ஆத்விக் அண்டுஅசோசியேட்ஸ் | மதிப்பீடு தொகையை விட **0.09% குறைவு** |
| | | | திருவாளர்.தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட **0.91% அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு திட்ட பணியின் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**பொருள் எண்.12**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) **2025–2026** ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த **28.04.2025** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **Providing BT Surface to Samayapuram Nagar 180/002/R068, Sakthi Nagar 2nd main Road cross street 180/003/R129, Surya avenue main road 180/002/R059) ,Surya avenue Cross Street 180/002/ R060,CTA Garden 1st Avenue 180/003/R225, AR Nagar 2nd cross street 180/003/ R 229,AR Nagar 3rd cross street 180/003/ R 230,AR Nagar 4th cross street 180/003/ R 231,Fathima Nagar 2nd Cross street 180/026/ R 1170,Fathima Nagar 3rd Cross street 180/026/ R 1170 in Mangadu Municipality,(Package-I)** | 68.00 | திருவாளர்.மேனகா அன்கோ | மதிப்பீடு தொகையை விட 0.15% **குறைவு** |
| | | | திருவாளர். எம்.கே.டெவலப்ர்ஸ் | தகுதிதேர்வு பெறப்படவில்லை |
| 2 | **Providing BT Surface to Srinivasa Nagar 4th cross street 180/018/R830, Srinivasa Nagar 1st street 180/014/R664,Padmavadhi Nagar 2nd Main Road 1st Cross street 180/003/R314,Syed Sadhik Nagar R.G Sultan Main Mosque Street 180/013/R629 Iin Mangadu Municipality.( Package-II)** | 31.00 | திரு.எம்.கார்த்திக் | மதிப்பீடு தொகையை விட 0.09% **குறைவு** |
| | | | திருவாளர்.தில்லைநட ராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.47% **அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு திட்ட பணியின் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**பொருள் எண்.13**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2025–2026 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், கீழ்கண்ட பூங்கா மேம்பாடு பணி மேற்கொள்ள கடந்த 07.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **Providing Green spaces at Addisson Nagar Ward No.9, Survey No 482/8 in Mangadu Municipality** | 51.00 | திரு.பி.சற்குணன் | மதிப்பீடு தொகையை விட –0.12% **குறைவு** |
| | | | திருவாளர்.தில்லைநடராஜா ரோடுகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 6.25% **அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு திட்ட பணியின் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**<u>பொருள் எண்.14</u>**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **2025–2026** ஆம் ஆண்டு **15**வது நிதிக்குழு மான்யம் (Untied Grant) திட்டத்தின் கீழ், கீழ்கண்ட பணி மேற்கொள்ள கடந்த **11.06.2025** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| **1** | **சீனிவாசா நகர்** (180/014/R666), **விக்னேஷ்நகர் மெயின் ரோடு** (180/001/R001, **விக்னேஷ்நகர் 4வது தெரு** (180/001/R005, **விக்னேஷ்நகர் 2வது தெரு** (180/001/R003) **மற்றும் விக்னேஷ்நகர் 4வது தெரு குறுக்கு தெரு** (180/001/R006) **பகுதிகளில் தார்சாலை அமைத்தல்.** | **34.00** | திரு.எம்.கார்த்திக் | மதிப்பீடு தொகையை விட **0.04% குறைவு** |
| | | | திருவாளர்.தில்லைநடராஜா ரோடுகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட **5.10% அதிகம்** |

**அலுவலக குறிப்பு:-**

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2)** மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு திட்ட பணியின் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**<u>பொருள் எண்.15</u>**

**<u>கசடுகழிவு மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்)</u>**2024.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இன் அத்தியாயம் X-A, பிரிவு 199, அத்தியாயம் XI ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மாநகராட்சி/நகராட்சி மன்றஅதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பறைகள் மற்றும் நச்சு தொட்டிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை ஒழுங்குபடுத்துவதற்காக துணை விதிகளை உருவாக்குப்பட்டுள்ள துணை விதிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**<u>பொருள் எண்.16</u>**

இந்நகராட்சியில் கசடு கழிவு மேலாண்மை விதிகள்(bye law) குறித்து மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி கசடு கழிவு மேலாண்மை (bye law) விதிகள் தொடர்பான பொதுமக்களின் ஆட்சேபனை கோரும் பொருட்டு தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு விளம்பரம் செய்யவும் அதற்கான கட்டணத்தை பொது நிதியில் செலுத்தவும் தோராய செலவினம் ரூ.50,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.17

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்..16390/ 2024/டிபிசி, நாள்.27.05.2025 ஆணையில் தெரிவிக்கப் பட்டுள்ளதற்கிணங்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறைக்கான (மானியக் கோரிக்கை எண்.34)நான்காண்டு சாதனை மலர் புத்தகம் அச்சிடப்பட்டு தயார் செய்யப்பட்டதற்க்கான பட்டியல் தொகையில் மாங்காடு நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை ரூ:5000/-ஐ கீழ்க்கண்ட வங்கி கணக்கில் திரு .ஜெ .மோகன்ராஜ் (Thiru.J.MOHANRAJ ) என்பவர் 31/05/2025 RTGS மூலம் செலுத்தியுள்ளார் எனவே மேற்கண்ட தொகைரூ :5000/- திரு.ஜெ.மோகன்ராஜ் என்பவருக்கு பொதுநிதியிலிந்து திரும்ப வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுக்கிறது.

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம் அனுமதி வழங்கரலாம்.

ஆ)மேற்படி பணிக்கு திரு.ஜெ.மோகன்ராஜ் (Thiru.J.MOHANRAJ) என்பவருக்கு பட்டியல் தொகை ரூ:5000/ நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதியை வழங்கலாம்.

பொருள் எண்.18

இந்நகராட்சியில் நகராட்சி பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்க்காக பயன்படுத்தப்பட்டு வரும் ஈர்ப்பு வாகனம் (வாகனம் எண் TN85(S)0708) தற்போது 75,000 கி.மீ கடந்த விட்டதால் வாகனத்தின் நான்கு டயர்களும் தேய்ந்து வெடிப்பு விட்டு உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி வாகன பயன்பாட்டின் அவசியத்தை கருதியும் கீழ்கண்டவாறு உள்ளூர் விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் விவரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ GST உட்பட |
|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சி பொறியாளர் தினசரி அலுவலக பயன் பாட்டிற்க்கு பயன்படுத்த ப்பட்டு வரும் ஈர்ப்புவாகனம் (வாகனம் எண் TN 85 S 0708) நான்கு டயர்கள் புதியதாக மாற்றி பொருத்துதல் பணி | 1)திருவாளர் லால்டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் எண்.2/104, மவுண்ட் பூந்தமல்லி ரோடு, காட்டுப்பாக்கம், சென்னை-600056. | 31344/- |
| | | 2) திருவாளர்.வள்ளுவர் 4வீல் பாயின்ட் எண் :413/4A ,பெங்களூர் நேஷ்னல் ஹைவே பனிமலர் இன்ஜினியரிங் கல்லூரி அருகில், வரதராஜபுரம், நஷ்ரத்பேட்டை | 33816/- |
| | | 3)திருவாளர். முருகு டயர்ஸ் எண்.எல்.ஜி.பி.காம்ப்ளக்ஸ் வானகரம் போரூர்,சென்னை-600095. | 35400/- |

**அலுவலககுறிப்பு:**

அ) மேற்படி வாகன பயன்பாட்டின் அவசியத்தை கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர் .லால் டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/S.LAL TYRES PVT. LTD )நிறுவனத்திற்க்கு நகர்மன்றத்தின் அனுமதியை உதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழுங்கலாம்.

ஆ) மேற்படி செலவினத்தை நகராட்சியின் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.19**

இந்நகராட்சியில் 2021-2022-ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மங்களபுரம் சுடுகாடு பகுதியில் நவீன தகன எரிவாயு மேடை கட்டிடம் கட்டுதல் பணியினை ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மங்களபுரம் பகுதியில் மாங்காடு நகராட்சிக்கு சொந்தமான நவீன தகன எரிவாயு மேடையினை தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனம் வசம் ஒப்படைப்பு செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதாலும், மேற்படி கட்டிடத்தை பராமரிப்பு செய்ய கீழ்கண்ட தனியார் அறக்கட்டளை நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளதை தொடர்ந்து, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | தனியார் அறக்கட்டளை நிறுவன விபரம் |
|---|---|
| 1. | M/s. Moksha Dwara,<br>5/137B, V.S. Nagar,<br>Thangam Avenue annexe,<br>Sikkarayapuram, Chennai – 600 128 |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கலாம்.
2. நகராட்சிக்கு சொந்தமான நவீன தகன எரிவாயு மேடை கட்டிடத்தை பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க அரசாணை நிலை எண் 228, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (நநி3) துறை நாள். 13.11.2008ன்படி மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு தனியார் அறக்கட்டளை நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்யவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**<u>பொருள் எண்.20</u>**

இந்நகராட்சியில் 2021-2022-ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மங்களபுரம் சுடுகாடு பகுதியில் நவீன தகன எரிவாயு மேடை கட்டிடம் கட்டுதல் பணியினை ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி முடிக்கப்பட்டுள்ள தகன மையத்தினை இயக்கிட தேவையான மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அனுமதி சான்றினை கலந்தாலோசகர் மூலம் பெறவும் அதற்கான ஆவணங்களை தயார் செய்ததற்கான தொகை ரூ.47200/-ஐ M/S.ENVIRO WORKS (OPC) Pvt.Ltd., பிளாட் எண்.20A, திரு.வி.க.இன்டஸ்டியல் எஸ்டேட், இன்னர் ரிங் ரோடு, கிண்டி, சென்னை-32 நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1) மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) திட்டப்பணி அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கும், செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.21**

இந்நகராட்சிஎல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நலவாழ்வு மையம், நியாய விலைக்கடை அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கீழ்கண்ட இடங்களில் மின்சார வாரியம் மூலம் புதிய மின் இணைப்புகள் பெறுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Ward | Place of Work | Details of work |
|---|---|---|---|
| 1 | 3 | சக்தி நகர் | Public Distribution shop |
| 2 | 24 | தோப்புத் தெரு | Public Distribution shop |

<u>அலுவலக குறிப்பு</u>-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிகளின் அவசியம் கருதி பணிக்குண்டான தொகை பொதுநிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.22**

இந்நகராட்சிக்கு புதியதாக அமைக்கப்பட்டு வரும் அலுவலக கட்டடத்தில் இயங்க உள்ள பல்வேறு பிரிவுகளான பொது பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவின் கீழ் தினசரி பல்வேறு கோப்புகள் மின்னனு முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகர் பகுதியில் மின்தடை ஏற்படும் சூழ்நிலையில் நிர்வாக பணிகளில் பாதிப்புகள் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை மேற்கொள்வதில் இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே, மின்தடை நேரத்தில் பணிகள் பாதிக்காத வண்ணம் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக 58.5KVA திறன் கொண்ட தானியங்கி டீசல் ஜெனரேட்டர் இயந்திரத்தினை அரசின் Gem Rate அடிப்படையில் வாங்கி கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.11.70 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணியினை நிர்வாக நலன் கருதியும், அலுவலக பயன்பாட்டின் அவசியம் கருதியும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.23**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மங்களபுரம் மயான பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மையத்தில் மின்தடை ஏற்படும் சூழ்நிலையில் தகன பணியில் பாதிப்புகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு தகனப்பணிகள் பாதிக்காத வண்ணம் புதியதாக 25KVA திறன் கொண்ட தானியங்கி டீசல் ஜெனரேட்டர் இயந்திரத்தினை அரசின் Gem Rate அடிப்படையில் வாங்கி கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணியினை தகன மைய பயன்பாட்டின் அவசியம் கருதியும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.24**

இந்நகராட்சியில் 20வது வார்டிற்குட்பட்ட அல்டீஸ் நுழைவாயில் சாலையில் தனியாக Galvanized கம்பங்கள் பொருத்தப்பட்டு அவற்றில் 90W திறன் கொண்ட தெருமின்விளக்குகள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையில் மேற்படி மின்கம்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 4 core x 16 sqmm PVC LT UG (Aluminium Cable) பழுதடைந்துள்ளதால் முறையே தெருவிளக்குகள் எரியாத நிலையில் அப்பகுதி முழுவதும் இருளில் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் பழுதடைந்த 4 core x 16 sqmm PVC LT UG (Aluminium Cable) மாற்றியமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணியினை பொது மக்கள் நலன் கருதி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.25**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் பிரதான சாலையில் அமைந்துள்ள அல்டீஸ் நுழைவாயில் முதல் பட்டூர் பேருந்து நிலையம் வரை புதிய மின் விளக்குகள் பொறுத்த மின் கம்பங்கள் புதியதாக அமைக்க மின்வாரியத்திடமிருந்து மதிப்பீடு கட்டணம் ரூ.2,40,598/- வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி மதிப்பீடு கட்டணத்தை பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மேற்படி மதிப்பீடு கட்டணத்தை மின்வாரியத்திற்கு பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் எண்.26

மாங்காடு நகராட்சியில் பொது சுகாதார பயன்பாட்டிற்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக கொசுப்புகை மருந்து அடிக்கப்பயன்படுத்தப்படும் பேட்டரி வண்டியில் பழுது ஏற்பட்டுள்ளதால் பயன்படுத்த இயலாமல் உள்ளது. நான்கு பேட்டரிகளும் புதிதாக வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரவும் அதற்கான செலவினம் ரூ.50,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.27

மாங்காடு நகராட்சி அலுவலகத்தில் அவ்வப்போது ஏற்படும் சில்லரை செலவினங்களை மேற்கொள்ள நகராட்சி நிரந்தர முன்பணம் ரூ.5,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.28

மாங்காடு நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்றும் பணியிலும் மற்றும் தொற்றுநோய் தடுப்பு பணியிலும் விழாக்களின் போது கிருமி நாசினியாக நீர்த்த சுண்ணாம்பு, மற்றும் பிளீச்சிங்பவுடர், கருப்பு பினாயில் பயன்படுத்தப்படுகிறது. தற்பொழுது இதன் இருப்பு குறைவாக உள்ளதாலும், மழைக்காலம் தொடங்கி உள்ளதாலும் அவசர அவசியம் கருதி மேற்கண்ட கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ.9,00,000/- பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம் .

**பொருள் எண்.**29

மாங்காடு நகராட்சியில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிதியின் கீழ் இந்நகராட்சி பகுதியில் உள்ள பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள ஒதுக்கீட்டு இடங்களில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள, அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 16 | ஸ்ரீராம் நகர் பூங்காவில் நடைபாதை, காவலர் அறை மற்றும் மேம்பாடு பணிகள் செய்தல் | 15.00 |

அலுவலக குறிப்பு - மேற்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் ஒதுக்கப்படுள்ள திறந்தவெளி ஒதுக்கீட்டு இடங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதை தவிர்க்கவும், பொது மக்களின் அடிப்படை வசதிக்காகவும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.30

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2025-2026ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 2 | இரகுநாதபுரம் மயானத்தில் ஆழ்துளை குழாய் அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி | 4.50 |
| 2 | 5 | பத்ரிமேடு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியினை பழுது பார்த்தல் மற்றும் தரை தளம் அமைக்கும் பணி | 9.50 |
| 3 | 19 | மேலாண்டை மாடவீதியில் புதிய பைப் லைன் அமைத்தல் | 4.00 |

அலுவலக குறிப்பு-

1. மேற்படி நகர்மன்ற உறுப்பினர்கள், துணைத்தலைவர் மற்றும் மன்ற தலைவர் ஆகியோரின் கோரிக்கையின்படியும், பொதுமக்களின் அடிப்படை வசதி கருதியும் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் எண்.**31**

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2025-2026ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1 | திருவள்ளுவர் சிட்டி பேஸ்-1 பூங்காவினை மண் நிரப்பி உயர்த்துதல் | 1.50 |
| 2 | 5 | ஏ.ஆர்.நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 5.60 |
| 3 | 6,9 | நரிவனம் சாலை குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் வார்டு எண்.9 பாலாஜி அம்பாள் நகர் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடங்களில் பேவர் பிளாக் அமைத்தல் | 0.65 |
| 4 | 7 | சுதா நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 9.50 |
| 5 | 9 | அம்பாள் இராமகிருஷ்ணா அவென்யூ 2வது தெரு மேற்கு பகுதியில் மேல் மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 11.00 |
| 6 | 10 | சக்ராநகர் மூகாம்பிகை தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 9.80 |
| 7 | 13 | செந்தமிழ் நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 1.60 |
| 8 | 16 | ஈ.வி.பி பட்டேல் தெரு பேவர் பிளாக் சாலையை உயர்த்தி மாற்றி அமைத்தல் | 7.70 |
| 9 | 16 | சிவானந்தா நகர் கழிப்பிடம் சுற்றுசுவர் அமைத்தல் | 19.50 |
| 10 | 17 | ஸ்ரீ காமாட்சி அம்மன் நகர் பகுதியில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 7.30 |
| 11 | 17 | செல்வகணபதி நகர் பூங்காவினை மண் நிரப்பி உயர்த்துதல் | 2.50 |
| 12 | 23 | சி.எஸ்.ஐ பள்ளி தெருவில் பேவர் பிளாக் மாற்றி அமைத்தல் | 2.40 |
| 13 | 24 | அண்ணா தெரு தென்காலனி மயானம் சுற்றுசுவர் அமைத்தல் | 20.00 |
| 14 | 24 | தெற்குகாமாட்சி நகர் பகுதியில் ஆண்கள் பொது கழிப்பிடம் கட்டுதல் | 7.50 |
| 15 | 27 | மசூதி தெரு பகுதியில் R.O.Plant அமைத்தல் | 14.00 |
| 16 | 27 | பானு நகர் தாழ்வான சாலையை உயர்த்தி பேவர் பிளாக் சாலை | 18.20 |

| | | | |
|---|---|---|---|
| | | அமைத்தல் | |
| 17 | 27 | பாலாஜி தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் மற்றும் சாந்தி நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் மேல்மூடி அமைத்தல் | 6.65 |
| 18 | 27 | தீன் நகர் குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.10 |

அலுவலக குறிப்பு- 1. மேற்படி நகர்மன்ற உறுப்பினர்கள், துணைத்தலைவர் மற்றும் மன்ற தலைவர் ஆகியோரின் கோரிக்கையின்படியும், பொதுமக்களின் அடிப்படை வசதி கருதியும் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் எண்.**32**

தாம்பரம் பகுதியில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவலுவலகம் தற்போது காட்டாங்கொளத்தூர் பகுதியில் சொந்த கட்டடமாக அமைக்கப்பட்டு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ள அலுவலக கட்டடத்தில், பழைய கட்டடத்தில் பயன்பாட்டில் இருந்த குளிரூட்டும் இயந்திரங்களை (Air Conditure) பிரித்தெடுத்து பராமரிப்பு பணி மேற்கொண்டு மீண்டும் பொருத்துதல், மற்றும் பல்வேறு பிரிவுகளுக்கு அமைக்கப்பட்டிருந்த தடுப்புகளை பிரித்து புதிய கட்டடத்தில் பொருத்தல் போன்ற பணிகளை மாங்காடு நகராட்சியின் பொதுநிதி மூலம் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் தனது செயலாணையின்படி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.00லட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் எண்.**33**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண்.3582/PPC/2024 நாள் .05.05.2025 ன்படி தமிழக அரசின் நான்கு ஆண்டு சாதனைகளை விளக்கும் வகையில் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மல்டி கலர் ஸ்டிக்கர்கள் மற்றும் நோட்டீஸ்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய ஏதுவாக அரசு அங்கீகாரம் பெற்ற அச்சகமான தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங் அண்ட் அலைடு சேவைத் தொழிற்கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யும் பணிக்கு மேற்படி நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மேற்படி நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் பணிக்குண்டான செலவினம் ரூ.2.00 இலட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.34

மாங்காடு நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி மக்கும் குப்பைகள் மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு கையாளப்படுகிறது. இதில் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தினசரி 8 டன் அளவிற்கு MCC-1ல் சேகரித்து வைக்கப்படுகிறது. இந்த கழிவுகளை ஸ்ரீ பாலாஜி கிரீன் எனர்ஜி எண், 44 ஜெயா நகர் மெயின்ரோடு அனாக்காபுத்தூர் என்ற நிறுவனத்திற்கு லாரிகள் மூலம் கொண்டு செல்ல டன் ஒன்றிற்கு என விலைப்புள்ளி கோரி MCC-1ல் கடந்த டிசம்பர் 2024 முதல் ஜீன் 2025 வரை சேர்த்துவைக்கப்பட்டுள்ள 840 டன் குப்பை கழிவுகளை அனுப்புவதற்கு தோராய செலவினம் ரூ.9,50,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.35

மாங்காடு நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி மக்கும் குப்பைகள் மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு கையாளப்படுகிறது. இதில் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தினசரி 8 டன் அளவிற்கு MCC-2ல் சேகரித்து வைக்கப்படுகிறது. இந்த கழிவுகளை ஸ்ரீ பாலாஜி கிரீன் எனர்ஜி எண், 44 ஜெயா நகர் மெயின்ரோடு அனாக்காபுத்தூர் என்ற நிறுவனத்திற்கு லாரிகள் மூலம் கொண்டு செல்ல டன் ஒன்றிற்கு என விலைப்புள்ளி கோரி MCC-2ல் கடந்த டிசம்பர் 2024 முதல் ஜீன் 2025 வரை சேர்த்துவைக்கப்பட்டுள்ள 840 டன் குப்பை கழிவுகளை அனுப்புவதற்கு தோராய செலவினம் ரூ.9,50,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகரமன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி